Literacy for a Billion

Movie: Malai Malai
Year: 2009

Song: Pooparikka Cholli
Lyricist: Vaali

பூப்பறிக்க சொல்
பூவா கேட்டுக் கொள்ளும்
நான் பறித்துக் கொண்டால்
கூடாதென்றா சொல்லும்
பூப்பறிக்க சொல்
பூவா கேட்டுக் கொள்ளும்
நான் பறித்துக் கொண்டால்
கூடாதென்றா சொல்லும்
மைவிழி சில்லென்ற மார்கழி
உன்மொழி சங்கீத செம்மொழி
கைவழி வராதோ பைங்கிளி
கொஞ்சலாம் நெஞ்சோடு
கொஞ்சம் நாழி
அன்பான சிநேகிதா சின்னதா
சேட்டை செய்யேன்டா
அச்சாரம் என்பதை இப்பவே
போட்டு வையேன்டா
அன்பான சிநேகிதி சொல்லை
நான் தாண்ட மாட்டேனே
ஆனாலும் சுள்ளென
உணர்ச்சியை தூண்ட மாட்டேனே

புன்னகை பூவை வீசி
எனை பூமியில் சாய்த்தாயே
மண்மடி சேரும் முன்னே
எனை உன்மடி சேர்த்தாயே
என்விழி தூக்கம் பார்த்து
இங்கு ஏழெட்டு நாளாச்சு
கண்ணிமை நான்கும் வேர்த்து
நிற்க காரணம் நீயாச்சு
யார்யாருக்கு யாரோ
யார் சொல்லுவாரோ
செம்மண்ணில் நீரும்
சேர்ந்தால் பின் வேறோ
கனவில் நினைக்கவில்லை
கால்கள் நடக்கும் முல்லை
எனக்கு கிடைக்கும் என நான்

அன்பான சிநேகிதா சின்னதா
சேட்டை செய்யேன்டா
அச்சாரம் என்பதை இப்பவே
போட்டு வையேன்டா
அன்பான சிநேகிதி சொல்லை
நான் தாண்ட மாட்டேனே
ஆனாலும் சுள்ளென
உணர்ச்சியை தூண்ட மாட்டேனே

காரணமின்றி தேகம்
மழை காலத்தில் வேர்க்கிறதே
மையலை என்ன சொல்ல
அது வெய்யிலை வார்க்கிறதே
வெப்பத்தில் வாடும்போது
இந்த தெப்பத்தில் நீ ஏறு
எப்பவும் காதல் வந்தால்
இங்கு ஆயிரம் கோளாறு
நீ இன்றி வாழ்ந்தால்
நீர் தேடும் வேர்தான்
நாமொன்று சேர்ந்தால்
வாழ்த்தாதோ ஊர்தான்
எனக்கு எனக்கு என்று
இருக்கும் அழகு மொத்தம்
உனக்கு உனக்கு இனிமேல்
அன்பான சிநேகிதா சின்னதா
சேட்டை செய்யேன்டா
அச்சாரம் என்பதை இப்பவே
போட்டு வையேன்டி

பூப்பறிக்க சொல்
பூவா கேட்டுக் கொள்ளும்

நீ பறித்துக் கொண்டால்
வேண்டாமென்றா சொல்லும்

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*